**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 27/2022**

**Prosecution witness : அ.சா.1** **Date : 05.09.2023**

| | |
|---|---|
| **Name : மயிலி** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused 2 present. ) (Others absent. Petition filed and allowed)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் வேங்கானூரில் குடியிருந்து கூலி வேலை செய்கிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். கடந்த 2021-ம் வருடம் மார்கழி மாதம் இரவு 7 மணிக்கு எனது மகன் சின்ராஜை ஈஸ்வரன் மற்றும் சுமதி, பச்சியம்மாள் ஆகியோர் கெட்டவார்த்தையால் ஆயா, அம்மா என்று திட்டினார்கள். என்னை கட்டையால் ஈஸ்வரன் என்பவர் அடித்தில் எனது இடது கையில் எலும்பு முறிவு ஏற்பட்டது.

2) சுமதி, மதேஷ், ஈஸ்வரன் ஆகியோர் எனது மகனை அடித்தார்கள். என்னை மேட்டூர் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்று சிகிச்சைக்காக சேர்த்தார்கள். காவலர்கள் நடந்த விவரத்தை என்னிடம் வாக்குமூலமாக கேட்டார்கள். நான் நடந்த விவரத்தை சொன்னேன். அவர்கள் புகார் வாக்குமூலமாக பதிவு செய்தார்கள். புகார் வாக்குமூலத்தில் உள்ள கைரேகை என்னுடையது தான் அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். **புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1** ஆகும். சுமதி என்பவர் நீதிமன்றத்தில் சாட்சி அடையாளம் காட்டினார். மற்ற எதிரிகள் வரவில்லை அதனால் அடையாளம் காட்டஇயலவில்லை. எதிரி நீதிமன்றத்தில் ஆஜர் இல்லை. அவருடைய

வருகையின்மையால் அடையாளம் குறித்து ஆட்சேபனை செய்யமாட்டேன் என்று மனு வாயிலாக தெரிவிக்கப்பட்டது. போலிசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

3) எதிரி குடும்பத்திற்கும், எங்கள் குடும்பத்திற்கும் எந்தவொரு பண பரிமாற்றமும் இல்லை என்றால் சரிதான். எனது மகன் சின்ராஜ்க்கு என்ன வயது என்றால் 32 ஆகும். அவருக்கு இன்னும் திருமணம் ஆகவில்லை என்றால் சரிதான். எனது மகன் லாரி டிரைவர் என்றால் சரிதான். அவருக்கு குடிபழக்கம் உள்ளது என்றால் சரிதான்.

4) எதிரி சுமதிக்கு கௌசல்யா என்ற மகள் உள்ளார் என்றால் சரிதான். அவர் தற்போது 11 வது படிக்கிறார் என்றால் சரிதான். எனது மகன் தவறாக கௌசல்யா என்பவரிடம் நடந்து கொண்டதால் அவர்களுக்குள் வாய்தகறாறு ஏற்பட்டது என்றால் இல்லை. எனது மகன் போதையில் என்னை தள்ளிவிட்டதில் எனக்கு அடிப்பட்டுவிட்டது என்றும், நான் நிலைதடுமாறி கீழே விழுந்ததால் எனக்கு காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல.

5) எனது மகன் கௌசல்யாவை தொந்தரவு செய்ததால் எதிரிகள் என் மீது புகார் கொடுத்துவிடுவார்கள் என்பதால் நான் பொய்யாக புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல. நான் காவல் நிலையத்தில் நான் தான் புகார் கொடுத்தேன் என்றால் போலிசார் வந்து எழுதிக்கொண்டார்கள். புகாரில் உள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் நான் மயக்கத்தில் இருந்ததால் அதில் உள்ள விவரம் தெரியாது.

6) சம்பவத்தன்று எனது கணவர் வீட்டில் இல்லை என்றால் சரிதான். சாட்சி சித்ராவுக்கும் எதிரிகளுக்கும் வாய்தகறாறு முன்விரோதம் உள்ளது என்றால் சரிதான். சாட்சி கருப்பண்ணன் என்பவர் எனக்கு சித்தப்பா முறை என்றால் சரிதான். சாட்சி பாலகிருஷ்ணன் எனது அண்ணன் மகன் என்றால் சரிதான். என்னுடன் பிறந்த அண்ணன் மகன்கள் எனது ஊரில் தான் உள்ளனர் என்றால் சரிதான்.

7) மாதேஷ் என்பவர் எங்கள் சண்டையை விலக்கிவிட்டார் என்று நான் சொல்லியுள்ளேன் என்றால் தவறு. அவரும் என்னை அடித்தார். சம்பவம் நடந்த தேதி தெரியுமா என்றால் மார்கழி மாதம் நடந்தது. தேதி, வருடம் நினைவில்லை. நான் மயக்க நிலையில் இருந்ததால் எனது மகனிடம் தான் விசாரித்தனர் என்றால் என்னை மேட்டூர் மருத்துவமனையில் விசாரிக்கவில்லை. காவல் நிலைத்தில் வைத்து தான் விசாரித்தனர். போலிசார் விசாரித்த தேதி, மாதம், வருடம் தெரியுமா என்றால் காலை 11 மணிக்கு மார்கழி மாதத்தில் விசாரித்தனர்.

8) எதிரிகள் என்னை கெட்டவார்த்தையால் பேசியது பொய் என்றால் சரியல்ல. என்னை கட்டையால் ஈஸ்வரன் அடித்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. எனது மகனை எதிரிகள் அடித்தாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. எனது மகனை அடித்ததை நான் நேரில் பார்த்தேனா என்றால் இல்லை. நான் மருத்துவமனையில் இருந்தபோது, இரவு 11 மணிக்கு தான் அடித்தார்கள். நான் வழக்குகாக வேண்டி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவத்திற்கும் எதிரிகளுக்கும் சம்மந்தம் இல்லை என்றும், எனது மகன் தள்ளிவிட்டதால் தான் காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல.

9) எனது வீட்டருகில் பூபதி வீடு, தன்ராஜ் மெத்தை வீடு உள்ளது என்றால் சரிதான். அருகில் சுப்ரமணி, லோகாம்பாள், முத்து ஆகியோர்கள் வீடு அருகில் உள்ளது என்றால் சரிதான். நான் எதிரிகளை பழிவாங்க வேண்டி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

ஒம்/-தே.மயில்சாமி,

**நீதித்துறை நடுவர் எண்.2,**

**மேட்டூர்.**

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 27/2022**

**Prosecution witness : அ.சா.2** **Date : 05.09.2023**

| Name : சித்ரா | Caste : |
|---|---|
| Father's Name : | Calling : |
| Village : | Religion : |
| Taluk : | Age : |

**(Accused 2 present. ) (Others absent. Petition filed and allowed)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் வேங்கானூரில் குடியிருந்து கூலி வேலை செய்கிறேன். அ.சா.1 எனது பக்கத்துவீட்டை சார்ந்தவர் ஆவார். கடந்த ஒரு வருடத்திற்கு முன்பாக ஈஸ்வரன் மற்றும் சுமதி, பச்சியம்மாள் ஆகியோர் அ.சா.1 ஐ அடித்து தலையில் காயம் ஏற்படுத்தினார்கள்.

2) சுமதி என்பவர் நீதிமன்றத்தில் சாட்சி அடையாளம் காட்டினார். மற்ற எதிரிகள் வரவில்லை அதனால் அடையாளம் காட்டஇயலவில்லை. எதிரி நீதிமன்றத்தில் ஆஜர் இல்லை. அவருடைய வருகையின்மையால் அடையாளம் குறித்து ஆட்சேபனை செய்யமாட்டேன் என்று மனு வாயிலாக தெரிவிக்கப்பட்டது. போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–**

3) எனக்கும், எதிரிகளுக்கும் ஏற்கனவே முன்விரோதம் இருப்பதால் பேச்சுவார்த்தை இல்லை என்றால் சரிதான். எதிரி சுமதியின் பெண் தான் கௌசல்யா என்றால் சரிதான். அவர் 11 ம் வகுப்பு படிக்கிறார் என்றால் சரிதான்.

புகார்தாரரின் மகன் சின்ராஜ் தெரியுமா என்றால் தெரியும். அவர் லாரி டிரைவர் என்றால் சரிதான். அவருக்கு வயது சுமாராக 32 இருக்கும் என்றால் சரிதான். சின்ராஜ்க்கு திருமணம் ஆகவில்லை என்றால் சரிதான்.

4) கௌசல்யாவிடம் சின்ராஜ் என்பவர் போதையை போட்டுக்கொண்டு தவறாக நடந்துகொண்டிருந்தார் என்றால் அது குறித்து தெரியாது. நான் வரும் போது சண்டை நடந்துகொண்டிருந்தது. அ.சா.1 ஐ யார் யார் அடித்தார்கள் என்றால் எனக்கு தெரியாது. அ.சா.1 நான் வரும் போது கீழே கிடந்தார். சம்பவத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். போலிசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான்.

5) அ.சா. 1ஐ அடித்தாக சொல்வது பொய் என்றும், எதிரிகளுக்கும் எனக்கும் முன்விரோதம் இருக்கும் காரணத்தால் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

ஒம்/–தே.மயில்சாமி,
**நீதித்துறை நடுவர் எண்.2,**
**மேட்டூர்.**

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 27/2022**

**Prosecution witness : அ.சா.3** **Date : 05.09.2023**

| | |
|---|---|
| **Name : கருப்பண்ணன்** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused 2 present. ) (Others absent. Petition filed and allowed)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் வேங்கானூரில் குடியிருந்து கூலி வேலை செய்கிறேன். அ.சா.1 எனது பெரியப்பா பெண் ஆவார். கடந்த ஒரு வருடத்திற்கு முன்பாக இரவு 8 மணிக்கு அ.சா.1 ஐ பக்கத்து வீட்டை சார்ந்த ஈஸ்வரன் மற்றும் சுமதி, பச்சியம்மாள் ஆகியோர் அ.சா.1 ஐ அடித்து தலையில் காயம் ஏற்படுத்தியதாக தகவல் சொன்னார்கள். நான் அவரை மேட்டூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்று பிறகு சேலம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன். போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–**

2) சம்பவத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். நான் சம்பவயிடத்திற்கு எவ்வளவு நேரம் கழித்து வந்தேன் என்றால் அரை மணி நேரம் கழித்து வந்தேன். நான் சம்பவம் நடந்த பிறகு சென்றதால் யார் யாரை அடித்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். யார் யாரை அடித்தார்கள் என்று யார் சொன்னார்கள் என்றால் அ.சா.1 எனக்கு சொன்னார்.

மறுவிசாரணை இல்லை.

ஒம்/–தே.மயில்சாமி,

**நீதித்துறை நடுவர் எண்.2,**

**மேட்டூர்.**

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 27/2022**

**Prosecution witness : அ.சா.4** **Date : 05.09.2023**

| | |
|---|---|
| **Name : பாலகிருஷ்ணன்** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused 2 present. ) (Others absent. Petition filed and allowed)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் வேங்கானூரில் குடியிருந்து வின்ட் மில்லில் வேலை செய்கிறேன். எனது அத்தையை யாரோ அடித்ததாக சொன்னார்கள் வேறு ஒன்றும் தெரியாது. என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 1வது கையெழுத்து என்னுடையது தான். கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.2** ஆகும். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியாது. சம்பவம் குறித்து போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**சாட்சியம் அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காத நிலையில், பிறழ் சாட்சியாக பாவிக்கக் கோரி, அரசு தரப்பில் கேட்கப்பட்டு அனுமதிக்கப்பட்டு சாட்சி பிறழ் சாட்சி என அறிவிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை–**

2) கடந்த 31.10.2021 ம் தேதி காலை 10.00 மணிக்கு நான் மற்றும் பேபி இருவரும் நின்று கொண்டு இருந்த போது காவல் துறையினர் வரைந்த வரைபடத்திற்கு மகஜர் சாட்சியாக இருக்க கேட்டுக்கொண்டதன் பேரில் சாட்சியாக கையொப்பம் செய்தேனா என்றால் இல்லை,

3) சம்பவ இடமான வேங்கானூரில் உள்ள வாதியின் வீட்டருகில் வரைந்த வரைபடத்திற்கு சாட்சியாக இருந்து விட்டு தற்போது எதிரியை இந்த வழக்கிலிருந்து காப்பாற்ற உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை –இல்லை

ஒம்/–தே.மயில்சாமி,
**நீதித்துறை நடுவர் எண்.2,**
**மேட்டூர்.**